# மாணவர்கள் தயாரிப்பில் பாலின சமத்துவ ஆவணப் படங்கள்




மாணவி ஏகம்மை சேதுராமனின் தாயாரான திருமதி மாலா, 'ஸூம்' சந்திப்பில் கலந்துகொண்டு பாலின சமத்துவம் குறித்துப் பேசினார்.

**படம்: சிங்கப்பூர் சமூக அறிவியல் பல்கலைக்கழகம்**

ஆ. விஷ்ணு வர்தினி

தங்களின் ஆவணப் படங்கள் மூலம் சிங்கப்பூர் சமூக அறிவியல் பல்கலைக்கழக மாணவர்களும் மதுரையில் அமைந்துள்ள லேடி டோக் கல்லூரி மாணவர்களும் பாலின சமத்துவ விழிப்புணர்வை ஏற்படுத்த முயற்சி செய்துள்ளார்கள். 'பில்டிங் பிரிட்ஜஸ் ஆண்ட் பிரேக்கிங் பேரியர்ஸ்' என்ற இணையச் சேவைக் கற்றல் திட்டத்தின்மூலம் ஒன்றிணைந்த இரு பல்கலைக்கழகங்களின் மாணவர்களும் படத்தயாரிப்பு உத்திகளையும் பாலின சமத்துவ சிக்கல்களைக் கையாளும் முறைகளையும் கற்றுக்கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து, '#நாட் அலோன், சமூகங்கள் எவ்வாறு பாலியல் தொல்லைகளை எதிர்கொள்கின்றன?', '#எம்பவர், மேற்படிப்பு கல்விக்கழகங்கள் எவ்வாறு பெண்களை ஊக்குவிக்கின்றன?' என்ற தலைப்பிலான இரண்டு ஆவணப் படங்களை மாணவர்கள் இணைந்து தயாரித்துள்ளார்கள்.

'யுனைடெட் விமன் சிங்கப்பூர்' அமைப்புடன் இணைந்து, இரு பல்கலைக்கழகங்களும் படத் தயாரிப்பை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தியதுடன் ஆவணப் படங்களை ஓர் ஊடகமாகப் பயன்படுத்தி, சமூகத்தில் மாற்றங்களைக் கொண்டுவரவும் மாணவர்களை ஊக்குவித்துள்ளனர்.

திட்டத்தில் கலந்துகொண்ட சிங்கப்பூர் சமூக அறிவியல் பல்கலைக்கழக மாணவி ஏகம்மை சேதுராமன், 20, '#எம்பவர்' காணொளியில் ஒலியமைப்பு இயக்குநராக பங்காற்றினார்.

நான்கு மாதங்கள் நீடித்த இந்தத் திட்டத்தின்மூலம் வெளிநாட்டு மாணவர்களுடன் அர்த்தமுள்ள கலந்துரையாடல்களில் ஈடுபட்டு நல்லுறவுகளைத் தான் வளர்த்துக் கொண்டதாக கூறினார். கணக்கியல் துறையில் பயிலும் அவர், இந்தியாவில் நிலவும் நிலைமையைப் பற்றியும் ஆழமாகத் தெரிந்து கொண்டதாகக் குறிப்பிட்டார்.

சிங்கப்பூரிலும் இந்தியாவிலும் வேறுபட்ட சமூக சூழல்களில் மாறுபட்ட சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர் பெண்கள்.

அவற்றுக்கேற்ப, பாலியல் தொல்லையால் அவதியுறும் பெண்களுக்கு சமூகத்தாரும் பள்ளிகளும் எவ்வாறு உதவலாம் என்பதைக் காட்டுகிறது '#நாட்அலோன்' என்ற ஆவணப் படம்.

இரு நாடுகளைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட பெண்களின் நேர்காணலுடன் பெண்களின் பாதுகாப்பையும் நலனையும் உறுதிசெய்வதற்கு இரு பல்கலைக்கழக நிர்வாகத்தினரும் எடுத்துவரும் முயற்சிகளை மாணவர்கள் ஆராய்ந்தனர்.

ஆணாதிக்கம் மேலோங்கியுள்ள விளையாட்டு, பொதுப் பாதுகாப்பு, தொழில்முனைவு முதலிய துறைகளில் எல்லா பாலினத்தாருக்கும் சம வாய்ப்புகளை வழங்க, பள்ளிகள் மேற்கொள்ளும் முயற்சிகளைத் தொகுத்துள்ளது, '#எம்பவர்' என்ற ஆவணப் படம்.

"பண்பாட்டிலும் பொருளாதார மேம்பாட்டிலும் வேறுபட்டிருக்கும் சிங்கப்பூர், இந்தியாவாழ் மாணவர்களுக்கு, ஒருவரையொருவர் பற்றிப் புரிந்துகொள்ள இத்திட்டம் வாய்ப்பளித்தது. அனைவருக்கும் பொதுவானதொரு சவாலாக உள்ள பாலின சமத்துவம் குறித்து கலந்துரையாடி, நீடித்து நிலைக்கும் நட்புகளை மாணவர்கள் வளர்த்துக் கொண்டனர்," என்றார் லேடி டோக் கல்லூரியின் பெண்கள் கல்வி நிலைய ஆலோசகர் முனைவர் பியூலா ராஜ்குமார்.

நேரடியாக சந்திக்க இயலாவிட்டாலும் இணையம்வழி கற்றலின் மூலமாக சமூகத்துக்கு சேவையாற்றும் ஒரு புது முயற்சியை மேற்கொண்டது மாணவர்களுக்கு நல்ல ஓர் அனுபவமாக அமைந்ததாக சிங்கப்பூர் சமூக அறிவியல் பல்கலைக்கழகம் தெரிவித்தது.

vishnuv@sph.com.sg

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction